செ.வெ. எண்: 444 நாள்: 12.09.2016

# கலை பண்பாட்டுத் துறை
# சென்னை அரசு கவின் கலைக்கல்லூரி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மாநில அளவிலான ஓவியம், சிற்பக் கலைக்காட்சி 08.09.2016 வியாழக்கிழமை முதல் 12.09.2016 திங்கட்கிழமை வரை சென்னை அரசு கவின் கலைக்கல்லூரியில் நடைப்பெற்றது.

மாநில அளவிலான ஓவியம், சிற்பக் கலைக்காட்சி 12.09.2016 திங்கட்கிழமை மதியம் 3.00 மணியளவில் நடைபெற்ற நிறைவு விழாவில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் விருதுகள் வழங்கி விழா பேரூரை ஆற்றினார்கள்.

கலை பண்பாடு துறை ஆணையர் அவர்கள் விழாவில் முன்னிலை வகித்து சிறப்புறை ஆற்றினார்கள்.

மாநில அளவிலான நுண்கலைக்கண்காட்சி நடத்துவதால், தமிழகத்திலுள்ள நுண்கலைக்கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும், நுண்கலைக் கலை படைப்புக்களை கண்காட்சியின் மூலம் பொதுமக்கள், கலை ஆர்வலர்கள் அறிந்து கொள்ளும்வகையிலும் மாநில அளவிலான நுண்கலைக்கண்காட்சியினை சென்னை அரசு கவின் கலைக்கல்லூரி வளாகத்தில் நடத்துவதற்கு ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது.

அவ்வரசாணையின்படி, மாநில அளவிலான நுண்கலைக்கண்காட்சி நடத்துவதற்கு ஏதுவாக, இக்கலைக்காட்சியில் தேர்வு செய்யப்படும் சிறந்த ஓவியங்கள் மற்றும் சிற்பப்படைப்புகளின் அடிப்படையில் பரிசு மற்றும் விருது வழங்கப்படவுள்ளன எனவும், 30 வயது மேற்பட்ட 10 மூத்த கலைஞர்களுக்கும், 30 வயதிற்குட்பட்ட 10 இளங்கலைஞர்களுக்கும் என மொத்தம் 20 கலைஞர்கள் விருதுக்கு தேர்வு செய்யப்படவுள்ளனர் எனவும், இதில் தேர்வு செய்யப்படும் மூத்த கலைஞர் ஒருவருக்கு ரூ.20,000/– வீதம் 10 மூத்த கலைஞர்களுக்கும், அதே போல் இளங்கலைஞர் ஒருவருக்கு ரூ.10,000/– வீதம் 10 இளங்கலைஞர்களுக்கும் வழங்கப்படவுள்ளன எனவும் அதற்காக தமிழகம் முழுவதும் உள்ள ஓவிய சிற்பக்கலைஞர்களிடமிருந்து ஓவியங்கள் மற்றும் சிற்பங்களின் புகைப்படங்கள் வரவேற்கப்பட உள்ளன எனவும் 08.11.2015, 13.01.2016, 20.01.2016 என்ற நாளில் நாளிதழில் விளம்பரப்படுத்தப்பட்டது.

இவ்விளம்பரத்தின்படி, இளங்கலைஞர்களது கலைப்படைப்புக்கள் 229 புகைப்படங்களும், மூத்தகலைஞர்களது கலைப்படைப்புக்கள் 126 புகைப்படங்களும் வரப்பெற்றது. இதில் இளங்கலைஞர்களது கலைப்படைப்புக்கள் 56 புகைப்படங்களும், மூத்தகலைஞர்களது கலைப்படைப்புக்கள் 58 புகைப்படங்களும் தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்களுக்கான கலைப்படைப்புக்கள் இளங்கலைஞர்கள், மூத்த கலைஞர்களிடமிருந்து வரவழைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, தெரிவு செய்யப்பட்ட 56 இளங்கலைஞர்களது கலைப்படைப்புக்களிலும், 58 மூத்தகலைஞர்களது கலைப்படைப்புக்களிலும் அடிப்படையாகக் கொண்டு 10 இளங்கலைஞர்களது கலைப்படைப்புக்கள், 10 மூத்தகலைஞர்களது கலைப்படைப்புக்கள் தெரிவு செய்யப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட 10 இளங்கலைஞர்களது கலைப்படைப்புக்களுக்கான விருதுக்கு ஒரு இளங்கலைஞருக்கு ரூ.10,000/– வீதம் 10 இளங்கலைஞர்களுக்கும், அதே போல் 10 மூத்தகலைஞர்களது கலைப்படைப்புக்களுக்கான விருதுக்கு ஒரு மூத்தகலைஞருக்கு ரூ.20,000/– வீதம் 10 மூத்தகலைஞர்களுக்கும் காசோலையாக மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் திருக்கரங்களால் வழங்கப்பட்டது. அதே போல், இளங்கலைஞர்களுக்கும், மூத்த கலைஞர்களுக்கும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**